Judicial Form No.60

CALENDAR AND JUDGMENT

(For use in cases whether there are more accused persons than one)

District of Tenkasi

Calendar of cases tried by the Judicial Magistrate of Tenkasi.

| Date of offence | Date of Report of complaint | Remand or surrender of accused | Release on bail | Commencement of trial | close of trial | Sentence of order |
|---|---|---|---|---|---|---|
| 26.04.2018 | 28.04.18 | 07.08.2018 | 07.08.2018 | 15.04.26 | 17.07.26 | 17.07.26 |
| C.S.D. 07.08.18 | Explanation of Delay and Remarks: NIL | | | | | |
| C.S.F.D 15.07.20 | | | | | | |
| D.Cogni.15.07.20 | | | | | | |
| A.P.D. 15.04.26 | | | | | | |

Judgment in CC 659/2024 on the file of the Judicial Magistrate of Tenkasi.

Complainant: The Sub Inspector of Police, Alwarkurichi P.S in Cr.No.121/2018

| Name of the Accused | Age | Fathers/Husband's Name |
|---|---|---|
| Rahman Beevi | 1968 | Sikkanthar |

| Caste or Religion | Calling | Residence | Police Station |
|---|---|---|---|
| Muslim | Coolie | Pottalputhur | Alwarkurichi |

**Offence** : Section 294(b), 323, 324, 506(1) IPC

**Sentence** : Accused is found not guilty Sec.294(b), 323, 506(1) IPC and the accused is acquitted Sec.255(1) of Crpc.,

MUTHU LAKSHMI

Digitally signed by MUTHU LAKSHMI
Date: 2026.07.17 19:11:53 +0530

Judicial Magistrate,
Tenkasi.

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி
முன்னிலை: திருமதி.எஸ்.முத்து லெட்சுமி, பி.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர், தென்காசி
2026 ம் வருடம் ஜூலை திங்கள் 17 ம் நாள் வெள்ளிக்கிழமை
ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 659/2024
CNR.No.TNTS02-003055-2024

அரசுக்காக – காவல் உதவி ஆய்வாளர்,
ஆழ்வார்குறிச்சி கா.நி.கு.எண் 121/2018 ... குற்றமுறையீட்டாளர்

/எதிர்/

ரஹ்மான் பீவி, 1968,
சிக்கந்தர்,
நாகூர் பள்ளிவாசல் தெரு,
பொட்டல்புதூர் ... எதிரி

இவ்வழக்கு 15.07.2020 அன்று அம்பாசமுத்திரம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.319/2020 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு வழக்கானது நிலுவையில் இருந்த போது, திருநெல்வேலி மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தின் A.No.42/2024, நாள் 02.02.2024 ன்படி இந்நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்யப்பட்டு, கடந்த 24.05.2024 அன்று ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.659/2024 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு, இறுதியான விசாரணைக்காக இன்று இந்நீதிமன்றத்தின் முன்னர் வரப்பெற்று முறையீட்டாளருக்காக அரசு உதவி வழக்கறிஞர் நிலை 2 தென்காசி அவர்கள் ஆஜராகியும், எதிரிக்காக எதிரியே ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும் கேட்டு சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும் பின்வரும் ....

## தீர்ப்புரை

**அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு –**

26.04.2018 ம் தேதி இரவு சுமார் 07.30 மணிக்கு, பொட்டல்புதூரில் உள்ள நாகூர் பள்ளிவாசல் தெருவில் உள்ள 1ம் எதிரியின் வீட்டு வாசல் முன்பு வைத்து இவ்வழக்கின் சாட்சி.1, 1 வது எதிரியிடம் ஏன் எனது தம்பியை அவதூறாக பேசுகிறீர்கள் என்று கேட்டதற்கு, 1 வது எதிரியும் அவரது மகளான இளம்சிறார் இர்பானாபர்வீனும், சாட்சி.1 ஐப் பார்த்து தேவிடியா மவளே, செருக்கியுள்ள எவ்வளவு திமிரு இருந்தா எங்கள் வீட்டில வந்து கேப்ப என பொதுயிடத்தில் வைத்து அவதூறாக பேசி, சாட்சி.1 க்கு மிகுந்த அவமானம் உண்டுபண்ணியும், இளம்சிறார் அருகில் கிடந்த இரும்பு

கம்பியை எடுத்து சாட்சி.1ன் தலையின் முன் நெற்றியில் ஓங்கி அடித்து சாதாரணகாயம் உண்டுபண்ணியும், அருகில் நின்ற 1வது எதிரி கையால் சாட்சி.1ன் நெஞ்சு, முதுகு, அடி வயிற்றில் ஓங்கி அடித்து சாதாரணகாயம் உண்டுபண்ணியும், 1வது எதிரியும், இளம்சிறாரும் சாட்சி.1ஐப் பார்த்து உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என்று கொலை மிரட்டல் விடுத்ததாகவும், எனவே, எதிரி இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1)ன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக எதிரி மீது ஆழ்வார்குறிச்சி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிரி இந்நீதிமன்றத்திலிருந்து பிரிவு 204 கு.வி.மு.ச.வின் கீழ் அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பேரில் ஆஜரானதும், வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207 ன் கீழ் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

3. ஆலோசனை செய்ய அவகாசம் கொடுக்கப்பட்ட பின்னர் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1)ன் கீழ் உள்ள தண்டனைக்குரிய குற்றங்களின் சாராம்சம் குறித்து பிரிவு 251ன் கீழ் அதனை விளக்கி வினவியபோது அவர் தான் குற்றவாளி இல்லை என்று மறுத்துரைத்தார். எனவே, அரசு தரப்பு சாட்சியங்களை விசாரணை செய்ய பிரிவு 254 கு.வி.மு.ச.வின் படி அரசு தரப்பு சாட்சிகளை ஆஜர்படுத்த அழைப்பாணை அனுப்ப இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டது.

4. இந்த வழக்கில் எதிரிக்கு எதிரான குற்றங்களை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் 4 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, 7 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன, சான்றுப் பொருள்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு** –

அ.சா.4 திரு.பரமசிவன், சிறப்பு உதவி ஆய்வாளர், தனது சாட்சியத்தில், கடந்த 28.04.2018ம் தேதியன்று தலைமை காவலர் வெங்கடேஷ் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த போது அம்பாசமுத்திரம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலைப் பெற்று அங்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த நபிஷா என்பவரிடம் புகார் வாக்குமூலத்தை 09.00 மணிக்கு பதிவு செய்து, 11.00 மணிக்கு நிலையம் வந்து புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.121/2018, இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(1)ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளதாகவும், அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.3 மற்றும் முதல் தகவலறிக்கை

அ.சா.ஆ.4 என்றும், பின்னர் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட விசாரணை அதிகாரி 28.04.2018 ம் தேதி பகல் 12.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் சிக்கந்தர் மற்றும் செய்யதுஅலி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுபுறத்தையும் பார்வையிட்டு அ.சா.ஆ.5 பார்வை மகஜர், அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளதாகவும், பின்னர் சாட்சிகள் நபிஷா, மும்தாஜ், மகபூப்ஜான், பார்வை மகஜர் சாட்சிகள் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் வெங்கடேஷ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், பின்னர் எதிரியை தேடி வந்த நிலையில், 07.08.2018 ம் தேதியன்று பொட்டல்புதூர் பஸ் ஸ்டாப்பில் வைத்து கைது செய்யப்பட்டு, அன்றே காவல்நிலைய பிணையில் விடுவித்துள்ளதாகவும், பின்பு காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த அம்பாசமுத்திரம் அரசு மருத்துவமனை மருத்துவர் ரவிசங்கர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று அ.சா.ஆ.7 பெற்றுள்ளதாகவும், பின்பு புலன் விசாரணை முடித்து எதிரி மீது இறுதி அறிக்கையை 07.08.2018 ம் தேதியன்று கனம் அம்பாசமுத்திரம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாகவும் சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது. இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிவுற்றது.

6. அரசு தரப்பு சாட்சிய விசாரணை முடிவுற்றவுடன் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் அடிப்படையில் எதிரிக்கு எதிரான சங்கதிகளை எதிரியிடம் கூறி அது சம்பந்தப்பட்ட பகுதிகளை விளக்கி கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய போது எதிரி பொய்சாட்சி என்று கூறினார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டா ? என்று வினவிய போது, எதிரி சாட்சிகள் இல்லை என்று கூறினார். எனவே, எதிரி தரப்பு முடிக்கப்பட்டது.

7. பின்னிட்டு இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டன. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள், இரு தரப்பு வாதுரைகள் ஆகியவற்றை பரிசீலித்த பின்னர் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1)ன் கீழ் உள்ள குற்றங்களின் சாராம்சமானது அரசு தரப்பால் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிருபணம் செய்யப்பட்டுள்ளதா ? என்பதேயாகும்.

**8. அரசு தரப்பு வழக்கறிஞர் பின்வருமாறு வாதிட்டார்** –

எதிரி, அ.சா.1 யை அசிங்கமாக பேசி, அடித்துக் காயப்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்த செயலானது அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகளின் மூலமும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் மூலமும் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் எதிரிக்கு அதிக பட்ச தண்டனை வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

**9. எதிரி தரப்பு வழக்கறிஞர் பின்வருமாறு வாதிட்டார்** –

இவ்வழக்கில், அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் பிறழ் சாட்சியம் அளித்துள்ளதாகவும், எனவே அரசு தரப்பு சாட்சிகளின் மூலம் எதிரிகள் மீதான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், எனவே, புலன் விசாரணை அதிகாரி சம்பவயிடம் சென்று முறையான புலன் விசாரணை செய்யாமலேயே எதிரிக்கு எதிராக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே, எதிரிக்கு எதிரானக் குற்றங்கள் எவ்வகையிலும் நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து எதிரியை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

**10. தீர்வு** –

26.04.2018 ம் தேதி இரவு சுமார் 07.30 மணிக்கு, பொட்டல்புதூரில் உள்ள நாகூர் பள்ளிவாசல் தெருவில் உள்ள 1ம் எதிரியின் வீட்டு வாசல் முன்பு வைத்து இவ்வழக்கின் சாட்சி.1, 1வது எதிரியிடம் ஏன் எனது தம்பியை அவதூறாக பேசுகிறீர்கள் என்று கேட்டதற்கு, 1வது எதிரியும் அவரது மகளான இளம்சிறார் இர்பானாபர்வீனும், சாட்சி.1 ஐப் பார்த்து தேவிடியா மவளே, செருக்கியுள்ள எவ்வளவு திமிரு இருந்தா எங்கள் வீட்டில வந்து கேப்ப என பொதுயிடத்தில் வைத்து அவதூறாக பேசி, சாட்சி.1 க்கு மிகுந்த அவமானம் உண்டுபண்ணியும், இளம்சிறார் அருகில் கிடந்த இரும்பு கம்பியை எடுத்து சாட்சி.1 ன் தலையின் முன் நெற்றியில் ஓங்கி அடித்து சாதாரணகாயம் உண்டுபண்ணியும், அருகில் நின்ற 1வது எதிரி கையால் சாட்சி.1 ன் நெஞ்சு, முதுகு, அடி வயிற்றில் ஓங்கி அடித்து சாதாரணகாயம் உண்டுபண்ணியும், 1வது எதிரியும், இளம்சிறாரும் சாட்சி.1 ஐப் பார்த்து உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என்று

கொலை மிரட்டல் விடுத்ததாகவும், எனவே, எதிரி மீது நடவடிக்கை எடுக்க கேட்டு புகார் கொடுத்ததாக முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது.

11. இந்நிலையில், புகார்தாரரான அ.சா.1 நபிஷா, தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரியை தெரியும் என்றும், தன் உறவினர் என்றும், தான் எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டதாகவும், கடந்த 7 வருடங்களுக்கு முன்பு ஆஜர் எதிரிக்கும் தனக்கும் வாய்த்தகராறு ஏற்பட்டதாகவும், தங்களுக்குள் ஏற்பட்ட பிரச்சனையை ஊர் பெரியவர்கள் முன்பு பேசி தீர்த்துக் கொண்டதாகவும், தான் தடுமாறி கீழே விழுந்ததில் தனக்கு காயம் ஏற்பட்டது என்றும், தற்போது தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 தன்னுடையது தான் என்றும், புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதியிருக்கிறது என்று தனக்கு தெரியாது என்றும், எதிரி தன்னை அசிங்கமாக பேசவில்லை, அடித்துக் காயப்படுத்தவில்லை, கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றும், தற்போது எதிரியுடன் சமாதானமாக சென்று சமாதான மனுவில் கையொப்பம் செய்துள்ளதாகவும், வழக்கை மேல் நடத்த விரும்பவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

12. அ.சா.2 மும்தாஜ், தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரியை தெரியும், தன் உறவினர் என்றும், அ.சா.1 நபிஷா தன் உடன்பிறந்த சகோதரி என்றும், தற்போது தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2 தன்னுடையதுதான் என்றும், புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதியிருக்கிறது என்று தனக்கு தெரியாது என்றும், இந்த வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

13. அ.சா.3 மகபூப்ஜான், தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், அ.சா.1 நபிஷா, அ.சா.2 மும்தாஜ் ஆகியோர்களை தெரியும் என்றும், இந்த வழக்கு சம்பவம் பற்றி தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

14. இந்த வழக்கில், அ.சா.4 தனது சாட்சியத்தில், புகார்தாரரிடம் புகார் மனு பெறப்பட்டு, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து, புலன் விசாரணை முடித்து குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது ஆகியவற்றை குறித்து சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம்

அளிக்காமல் இருப்பதால் அ.சா.4 ன் சாட்சியத்தை மட்டுமே வைத்து எதிரி குற்ற செயல்களில் ஈடுபட்டார் என்றோ அல்லது எதிரிக்கு எதிரான புகார்தாரரை பொது இடத்தில் வைத்து அசிங்கமாக பேசி அவமானப்படுத்தியும், அடித்து காயப்படுத்தி, கொலைமிரட்டல் விடுத்ததாக அரசு தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்று முடிவுக்கு வர முடியாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

15. மேற்சொன்ன விவாதம் காரணங்கள் மற்றும் பரிசீலனையை பார்க்கும் போது, அரசு தரப்பில் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1)ன் கீழ் உள்ள குற்றங்களின் சாராம்சம் தகுநிலை ஐயப்பாட்டுக்கு அப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரி குற்றவாளி இல்லை என்று கண்டறிகிறது.

16. முடிவில், எதிரி இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1)ன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரியை குவிமுச பிரிவு 255(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

17. இவ்வழக்கின் எதிரி கடந்த 07.08.2018 ம் தேதியன்று கைது செய்யப்பட்டு, அன்றே நிலைய பிணையில் சென்றுள்ளார்.

<u>18. வழக்குச் சொத்து</u> –

இந்த வழக்கில் சொத்துக்கள் தாக்கல் இல்லை.

இத்தீப்பானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, பின்னர் 2026 ம் வருடம் ஜூலை திங்கள் 17 ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

MUTHU LAKSHMI
Digitally signed by MUTHU LAKSHMI
Date: 2026.07.17 19:12:03 +0530

நீதித்துறை நடுவர்,
தென்காசி.

**அரசு தரப்பு சாட்சிகள் –**

| | |
|---|---|
| அ.சா.1 | நபிஷா |
| அ.சா.2 | மும்தாஜ் |

| | |
|---|---|
| அ.சா.3 | மகபூப்ஜான் |
| அ.சா.4 | திரு.பரமசிவன், சிறப்பு உதவி ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் –**

Judicial Form No.68

| SL. No | Description to the exhibit and its date | Date, when the exhibit was filed in the case | How marked | By whom filed | remarks |
|---|---|---|---|---|---|
| 1 | புகார் வாக்குமூலத்திலுள்ள அ.சா.1ன் கையொப்பம் | 29.05.2026 | அ.சா.ஆ.1 | அ.சா.1 | அசல் |
| 2 | புகார் வாக்குமூலத்திலுள்ள அ.சா.2ன் அறிவேன் சாட்சி கையொப்பம் | 29.05.2026 | அ.சா.ஆ.2 | அ.சா.2 | அசல் |
| 3 | புகார் வாக்குமூலம் | 17.07.2026 | அ.சா.ஆ.3 | அ.சா.4 | அசல் |
| 4 | முதல் தகவல் அறிக்கை | 17.07.2026 | அ.சா.ஆ.4 | அ.சா.4 | அசல் |
| 5 | பார்வை மகஜர் | 17.07.2026 | அ.சா.ஆ.5 | அ.சா.4 | அசல் |
| 6 | மாதிரி வரைபடம் | 17.07.2026 | அ.சா.ஆ.6 | அ.சா.4 | அசல் |
| 7 | காயச்சான்று | 17.07.2026 | அ.சா.ஆ.7 | அ.சா.4 | அசல் |

**அரசு தரப்பு சான்றுப்பொருள்கள் –** இல்லை.

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருள் –** இல்லை.

MUTHU LAKSHMI

Digitally signed by MUTHU LAKSHMI
Date: 2026.07.17 19:12:10 +0530

நீதித்துறை நடுவர்,
தென்காசி.

**குறிப்பு :–**

1. எதிரி விசாரணை காலத்தில் பிணையில் இருந்தார்.
2. தீர்ப்பு குறித்து காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.
3. அரசு வழக்கறிஞருக்கு தீர்ப்பு நகல் வழங்கப்பட்டது.
4. சாட்சிகளை மூன்று நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.